பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
27 09 2025 SATURDAY 7 15 AM
ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, ஒடிசா மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.
- விவசாயம், மருந்து, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் ரஷ்யாவும் முடிவு செய்துள்ளன.
- வடகிழக்கு மாநிலங்கள் கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் வளர்ச்சியை எட்டியுள்ளதாக வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.
- நாட்டில் சுற்றுலாத்துறை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா, இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது

> > > > > > < < < < < <

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஒடிசா மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

Jarsuguda செல்லும் அவர். ரயில்வே, கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு, வீட்டுவசதி, தொலைத்தொடர்பு உள்ளிட்ட துறைகளில் 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

கோராப்புட் - பைக்குடா மற்றும் மனபார் – கோராப்புட் இடையேயான வழித்தடங்களை இரட்டை வழித்தடமாக மாற்றும் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

பெர்காம்பூர் - சூரத் இடையேயான அம்ரித் பாரத் ரயில் சேவையையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளார்.

திருப்பதி, பாலக்காடு, பாட்னா, ஜம்மு, இந்தூர், தார்வாட், ஜோத்பூர், பிலாய் ஆகிய எட்டு இடங்களில் உள்ள IIT-களின் விரிவாக்கப் பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

நாடுமுழுவதும் 275 பொறியியல் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கான புதிய திட்டத்தை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

சம்பல்பூர் மற்றும் பெர்காம்பூரில் திறன் மேம்பாட்டு மையங்களையும் அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

பெர்பாம்பூரில் உள்ள மருத்துவக் கல்லூரியின் விரிவாக்கப் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

ஒடிசா அரசின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 50 ஆயிரம் பயனாளிகளுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை திரு. நரேந்திர மோடி வழங்கவுள்ளார்.

>>>>>><<<<<<

விவசாயம், மருந்து, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் ரஷ்யாவும் முடிவு செய்துள்ளன.

இந்தியா வந்துள்ள ரஷ்ய துணைப் பிரதமர் திரு. Dmitry Patrushev, மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹானை புதுதில்லியில் நேற்று சந்தித்து பேசினார்.

வேளாண் துறையில் தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் கல்வியில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

ரஷ்ய துணைப் பிரதமர் தலைமையிலான தூதுக்குழு, ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டாவை சந்தித்துப் பேசியது.

உரங்கள், ரசாயனம், மருந்துகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இந்த சந்திப்பின் போது, விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயலையும், ரஷ்ய துணைப் பிரதமர் சந்தித்து பேசினார்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், புதிய வாய்ப்புகளை ஆராய்வது குறித்தும் இந்த சந்திப்பின் போது ஆலோசனை நடத்தப்பட்டதாக திரு. பியூஷ் கோயல் சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு மாநிலங்கள் கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் வளர்ச்சியை எட்டியுள்ளதாக வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களில் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொலைத்தொடர்பு கட்டமைப்பும் இம்மாநிலங்களில் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், தொலைத் தொடர்பு துறைக்கு ஊக்கமளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், நாட்டில் டிஜிட்டல் கட்டமைப்பும், தொழில்நுட்ப வலிமையும் அதிகரிக்கும் என்று திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறினார்.

> > > > > > < < < < < <

அந்தமான் - நிகோபார் கடற்கரை பகுதியில் இயற்கை எரிவாயு வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த எரிவாயு மாதிரிகள் சோதனை செய்யப்பட்டதில், அவற்றில் 87 சதவீதம் மீத்தேன் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இது, நாட்டின் எரிசக்தி பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல் என்று திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

> > > > > > < < < < < <

கப்பல் கட்டுமான தொழில் துறையை ஊக்குவிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

தமிழகத்தின், செங்கல்பட்டு மாவட்டம், தென்பட்டிணத்தில் உள்ள தனியார் கடல்சார் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அண்மையில் கப்பல் கட்டுமானம் மற்றும் கடல்சார் அமைப்புகளை வலுப்படுத்தும் மூன்று அம்ச திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்ததை சுட்டிக்காட்டினார்.

25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் கடல்சார் மேம்பாட்டு நிதியம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இது கடல்சார் தொழில்துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் என்றும் திரு. சர்பானந்த சோனோவால் கூறினார்.

> > > > > > < < < < < <

பிரிக்ஸ் கூட்டமைப்பு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கான வலுவான அமைப்பாக திகழ்வதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

*நியூயார்க்கில் நடைபெற்ற பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், ஐ.நா-வில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*வர்த்தக நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.*

*ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயார்க் சென்றுள்ள டாக்டர் ஜெய்சங்கர், ரஷ்யா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தோனேஷியா, கியூபா, ருமேனியா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுக்களை மேற்கொண்டார்.*

*>>>>>><<<<<<*

*உலக சுற்றுலா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

*உலகம் முழுவதும் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் ஐ.நா சுற்றுலா அமைப்பின் சார்பில், 1980ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் செப்டம்பர் 27ஆம் தேதி உலக சுற்றுலா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.*

*இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.*

*புதுதில்லியில் நடைபெறும் உலக சுற்றுலா தின நிகழ்ச்சிக்கு மத்திய சுற்றுலாத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி தலைமை வகிக்கவுள்ளார்.*

*இதனிடையே, நாட்டில் சுற்றுலாத்துறை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*கடந்த ஆண்டில் சுமார் ஒரு கோடி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்துள்ளதாக சுற்றுலா அமைச்சகம் கூறியுள்ளது.*

*நடப்பாண்டில், கடந்த மாதம் வரை 56 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியா வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் சுற்றுலாத் துறையை மேலும் ஊக்குவிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.*

*தங்குமிடங்களுக்கான சேவை வரி 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதன் மூலம், இத்துறை மேலும் வளர்ச்சியடையும் என்றும், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, உத்தரபிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேச மாநில அரசுகள் சிறப்பு ஒருநாள் சுற்றுலா திட்டங்களுக்கு இன்று ஏற்பாடு செய்துள்ளன.*

*இதனிடையே, புகழ்பெற்ற சுற்றுலா தலமாக விளங்கும், தமிழகத்தின் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – சரவணன் 51 செகண்ட்ஸ்)*

*> > > > > > < < < < < <*

*வளர்ச்சித் திட்டங்களை முறையாக செயல்படுத்த துல்லியமான புள்ளிவிவர தகவல்கள் அவசியம் என்று மத்திய புள்ளியியல் துறை இணையமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.*

*சண்டிகரில் நடைபெற்ற மாநில புள்ளியியல் துறை பிரதிநிதிகள் மாநாட்டில் பேசிய அவர். திட்டப் பலன்கள் பயனாளிகளை முறையாக சென்றடைய, உள்ளூர் அளவிலான தெளிவான புள்ளி விவரங்கள் அவசியம் என்று கூறினார்.*

*> > > > > > < < < < < <*

*ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் ஜார்க்ண்ட் மாநிலங்களின் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, ஒடிசாவின் கடலோரப் பகுதிகளில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*இதனையடுத்து. ஒடிசா மாநிலத்தின் 17 மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டார்.*

*முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு ஆட்சியர்களை, முதலமைச்சர் அறிவுறுத்தினார்.*

*> > > > > > < < < < < <*

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா, இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.*

*கொழும்பில் இப்போட்டி மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.*

*> > > > > > < < < < < <*

***உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் பல்வேறு ஆட்டங்கள் புதுதில்லியில் ஜவஹர்லால் நேரு மைதானத்தில் இன்று முறைப்படி தொடங்கி நடைபெறுகின்றன.***

***அடுத்த மாதம் 5ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில். தொடர் ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், ஈட்டி எறிதல் உள்ளிட்ட பிரிவுகளில் 186 பதக்கங்களுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.***

>>>>>>END<<<<<<